**செய்தி வெளியீடு எண். 248** **நாள். 04.5.2007**

உயர்கல்வித் துறை

செய்தி வெளியீடு

2007–2008–ம் ஆண்டிற்கான பி.இ.,பி.டெக். மற்றும் பி.ஆர்க் படிப்புகளுக்கான கலந்தாய்வு நிகழ்ச்சிகளின் அட்டவணை:

| வ.எண். | நிகழ்ச்சிகள் | 2007–ல் உத்தேசிக்கப்படும் நாள் |
|---|---|---|
| 1) | பி.ஈ / பி.டெக்., பி.ஆர்க். மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பம் கோரும் அறிவிக்கை வெளியிடப்படுதல் | 13.05.2007 |
| 2) | விண்ணப்பம் வழங்குதல் | 16.05.2007 |
| 3) | விண்ணப்பங்கள் வழங்குவதற்கான மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பெறுவதற்கான கடைசிநாள் | 05.06.2007 |
| 4) | தரவரிசை பட்டியல் வெளியிடுதல் | 25.06.2007 |
| 5) | சிறப்பு ஒதுக்கீடு பட்டியல் அறிவிப்பு | 30.06.2007 |
| 6) | கலந்தாய்வு தொடக்கம் | 09.07.2007 |
| 7) | கலந்தாய்வு முடிவு | 15.08.2007 |
| 8) | வகுப்புகள் தொடக்கம் | 20.08.2007 |

2. பொறியியல் மாணவர் சேர்க்கைக்கான அரசு ஒதுக்கீட்டு இடங்களுக்கான ஒற்றைச் சாளர கலந்தாய்வு, அண்ணா பல்கலைக்கழகம், சென்னையில் மட்டுமே நடைபெறும்.

…2

3. நிர்வாக ஒதுக்கீட்டு இடங்களுக்கான மாணவர் சேர்க்கைக்கு அரசால் அங்கீகரிக்கப்பட்ட சுயநிதி தொழிற்கல்வி நிறுவனங்களின் கூட்டமைப்பினால் ஒற்றைச் சாளரக் கலந்தாய்வு முறைப்படி மாணவர் சேர்க்கை நடைபெறும். மேற்கண்ட முறையில் நடைபெறாத மாணவர் சேர்க்கை அரசால் எவ்வகையிலும் அங்கீகரிக்கப்பட மாட்டாது.

4. அரசு ஒதுக்கீட்டு இடங்கள் மற்றும் நிருவாக ஒதுக்கீட்டு இடங்களுக்கான மாணவர்ச் சேர்க்கைக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள், அவர்கள் தகுதித் தேர்வில் பெற்றுள்ள மதிப்பெண்களின் அடிப்படையில் தரவரிசைப் பட்டியல் தயார் செய்யப்பட்டு ஒற்றைச் சாளரக் கலந்தாய்வு முறைப்படி, முறையே அண்ணா பல்கலைக் கழகம் / சுயநிதி தொழிற்கல்வி கல்லூரிகளின் கூட்டமைப்பு ஆகியவற்றால் கல்லூரிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படும். தரப்பட்டியலில் ஒன்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் ஒரே மதிப்பெண்கள் பெற்றிருப்பார்களேயானால் அவர்கள் கீழ்க்கண்ட முறையில் தரவரிசை நிர்ணயம் செய்யப்படுவார்கள்:

1. கணிதப் பாடத்தில் பெற்றுள்ள மதிப்பெண்களின் விழுக்காடு,
2. இயற்பியல் பாடத்தில் பெற்றுள்ள மதிப்பெண்களின் விழுக்காடு,
3. விருப்பப் பாடத்தில் பெற்றுள்ள மதிப்பெண்களின் விழுக்காடு,
4. பிறந்த தேதி,
5. கணினி மூலம் எண்கள் வழங்கி தேர்வு செய்தல் (Random Number)

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.**